செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 151 நாள் : 15-3-2017

செய்திக் குறிப்பு

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,வேலூர் மாவட்டப் பிரிவின் சார்பாக, 2017–ஆம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழியங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கிடையேயான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 16.03.2017க்குப் பதிலாக **25.03.2017** அன்று காலை 8.00 மணி முதல் நேதாஜி விளையாட்டரங்கில் நடத்தப்பட உள்ளது.

மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழியங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மட்டுமே போட்டிகளில் பங்கேற்கலாம். போட்டிகளின் விவரங்கள் பின்வருமாறு

<u>தடகள போட்டிகள் :</u> 100மீ. 200மீ. 400மீ. 4 X100 மீ தொடர் ஓட்டம், வட்டு ஏறிதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், நீளந்தாண்டுதல் மற்றும் உயரந்தாண்டுதல்.

<u>குழுப் போட்டிகள்:</u> கபாடி, கோ–கோ, கையுந்துப்பந்து, வளையப்பந்து, எறிபந்து, இறகுப்பந்து மற்றும் கால்பந்து.

போட்டிகள் 31.12.2016 அன்று 14 வயது, 17 வயது மற்றும் 19 வயதுக்குட்பட்ட மாணவ மாணவியர்களுக்கு 3 பிரிவாக நடத்தப்படும்.

பங்கு பெற உள்ள பள்ளிகளின் பெயர் விவரம் பின்வருமாறு

அஆஉ பள்ளி, ஆலங்காயம், ஆயல், ஏலாத்தூர், ஓலக்காசி, மகமதுபுரம், ஜடையனூர், செட்டிக்குப்பம், ஆர்வெங்கடாபுரம் மற்றும்

அஆமேநிபள்ளிகள் அரக்கோணம் ஆண்கள் மற்றும் பெண்கள், காரை, அலமேலுமங்காபுரம், பில்லாந்திப்பட்டு, பேரணாம்பட்டு, பெருமுகை மற்றும் டி.டி.மோட்டூர் ஆகியவை ஆகும்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் தங்கள் பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து வயதுச் சான்றிதழ் பெற்று வருதல் வேண்டும். வயதுச் சான்றிதழ் இன்றி வருகை தரும் மாணவர்கள் / மாணவியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். போட்டிகளில் கலந்து கொள்ளும் பள்ளிகள் தங்கள் பள்ளி மாணவ / மாணவியர்களின் பெயர்களை வேலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

தடகளப் போட்டியில் முதல் 3 இடங்களைப் பிடிப்பவர்களுக்கும் மற்றும் குழுப்போட்டியில் முதலிடம் பிடிப்பவர்களுக்கும் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு வேலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை 0416–2221721 என்ற எண்ணிலோ அல்லது 7401703483 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

15/3/17

மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர்.

2/2

15/03/2017 செ.மா.அ. வேலூர்– 9. 15/3/17